1973 ஆகஸ்ட் 8]

3. அறிவிப்பு

ஜகதீஸ்வரி என்ற பெண் மகளிர் மாடத்திலிருந்து பேரவைக்குள் துண்டறிக்கைகளை வீசியெறிந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஜகதீஸ்வரி என்ற பெண் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து அச்சடித்த அறிக்கைகளை மன்றத்திற்குள் வீசியெறிந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது இந்த அவையின் உரிமையை மீறிய நிகழ்ச்சியாகும் என்று தெரிவித்துக் கொண்டு, இதுபற்றி பேரவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள் என அறிவிக்கின்றேன்.

4. அரசினர் தீர்மானம்.

பேரவைக்குள் துண்டறிக்கைகளை மகளிர் மாடத்திலிருந்து வீசியெறிந்த ஜகதீஸ்வரிக்கு சிறைத் தண்டனை விதிப்பது குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்று 10.30 மணி அளவில் சட்டப் பேரவை பார்வையாளர்களுக்குள்ள மகளிர் மாடத்திலிருந்து ஜகதீஸ்வரி என்ற நபர் கோஷங்களைக் கூறிக்கொண்டு துண்டறிக்கைகளைச் சட்டப் பேரவைக்குள் வீசியெறிந்தார். இது இப்பேரவையை அவமதிக்கும் பெருங்குற்றமாகும். அவரை உடனே பிடித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு பதினைன்கு நாட்கள் சிறைத் தண்டனை விதித்து சென்னை மத்திய சிறைக்கு அனுப்புமாறு இப்பேரவை தீர்மானிக்கிறது".

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தப் பிரச்னையை உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். உரிமைக் குழு யோசித்துப் பார்த்து தண்டனை கொடுக்கலாம். ஏன் உடனடியாக ஒரு பெண்ணுக்கு இரண்டு வாரங்கள் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.